செ.வெ.எண் : 706 நாள் : 12.10.2009

# பத்திரிக்கை செய்தி

## கள்ளச்சந்தை தடுப்புக் காவலில் 100 பேர் அடைப்பு

தமிழக அரசால் பொது மக்களுக்கு அரசு மானிய விலையில் ஒரு ருபாய்க்கு ஒரு கிலோ அரிசி என அறிவிக்கப்பட்டு ஒரு குடும்ப அட்டைக்கு 20 கிலோ அரிசி வீதம் வழங்கப்பட்டு வருகிறது, ஒரு ருபாய்க்கு ஒரு கிலோ அரிசி என அறிவித்து அதன் படி அந்த திட்டம் செயல்பாட்டிற்கு வந்தவுடன் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் செயல்பாடுகள் முடுக்கிவிடப்பட்டு அத்தியாவசியப் பொருட்கள் கடத்துபவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நடப்பு 2009 ஆம் ஆண்டு இது வரையில் 7,096 வழக்குகள் அத்தியாவசியப் பொருட்கள் கடத்தல் தடுப்புச் சட்டத்தின்ப்படி பதிவு செய்யப்பட்டு அதன் மூலம் 28,127.28 குவிண்டால் அரிசி, 1,29,487 லிட்டர் மண்ணெண்ணெய் மற்றும் 2,108 எரிவாயு உருளைகள், இதரப் பொருட்கள் மதிப்பு 26,66,859 ஆக மொத்தம் 4,46,85,927 மதிப்புள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டும் 3,536 நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கும் அனுப்பப்பட்டுள்ளனர். மேலும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட 1,062 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் அரிசி கடத்தலில் தொடர்ந்து ஈடுபடுபவர்கள் மீது கள்ளச்சந்தை தடுப்புக காவல் சட்டத்தின்படி (B.M.Act) நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்படி சட்டத்தில் கைது செய்யப்படும் எதிரிக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் ஆணையர் அவர்களால் ஆணைப்பிறக்கப்பட்டு கள்ளச்சந்தை தடுப்புக் காவலில் வைக்கப்படுகின்றனர். மேலும் அந்த எதிரியை வழக்கு சம்மந்தமாக நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தி சிறை தண்டனை கிடைக்க செய்ய வழிவகை செய்யப்படுகிறது.

சென்னை குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறை காவல் துறை கூடுதல் இயக்குநர் மற்றும் காவல் துறை தலைவர் அவர்களின் அறிவுரையின் பேரில் பொது மக்களுக்கு தமிழ்நாடு அரசால் மானிய விலையில் வழங்கப்படும் பொது விநியோகத்திட்ட ரேசன் அரிசியை அண்டை மாநிலங்களுக்கு சட்டவிரோதமாக கடத்துவதை தடுக்கும் பொருட்டு மேற்படி சட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் 100 பேர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கள்ளச்சந்தை தடுப்புக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

3.6

S.K. டோக்ரா (S.K. Dogra)
காவல்துறை கூடுதல் இயக்குனர்
குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்
புலனாய்வுத்துறை, நந்தனம்
சென்னை – 35

மேலும் விவரங்களுக்கு
cell:- 9840711193
திரு. சோமசுந்தரம்,
ஆய்வாளர் CSCID
நுண்ணறிவுப்பிரிவு

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை